1978 மார்ச் 20]

அதற்குப் பக்கத்திலிருக்கிற அகழிகளையும், இப்படிப்பட்ட பழைய கால வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டக்கூடிய அந்த இடத்தை துப்புரவு செய்து, அபிவிருத்தி செய்து பழங்காலப் பெருமையைக் காப்பாற்றுவதற்கும், இடிபாடுகளை எடுத்துச் சுத்தமாக வைக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, செஞ்சிக் கோட்டைப் பகுதி தொல்பொருள் ஆராய்ச்சித் துறையிலே இருக்கிறது. அவர்கள் மேம்படுத்தி அதை ஒரு மிகச் சிறந்த சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை பரிசீலனையில் வைத்துக் கொண்டிருக்கிறது.

திரு. அ. க. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே செஞ்சிக் கோட்டையில் அரங்கநாதர் கோயில் என்ற ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலை அழகுபடுத்தி, அங்கே வணங்குவதற்குரிய, தெய்வ வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் முன்னாலே சொன்னபடி, செஞ்சிக் கோட்டைப் பகுதி சுற்றுலாத்துறையினிடத்திலே இல்லை. ஆகவே, இந்தக் கேள்வியை அந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சரிடம் கேட்டால் பதில் கிடைக்கும்.

தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி.

* 624 வினா—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், தீர்த்தமலையில் சுற்றுலா விடுதி கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரூர் வட்டம் தீர்த்தமலையிலுள்ள அந்த இயற்கையான நீரூற்று அந்த மலையிலுள்ள இரும்பு, மற்றும் தாதுப் பொருள்களைக் கொண்டிருப்பதால், அவற்றால் சரும நோய் போன்ற நோய்கள் தீர்க்கப்படுவதாக தினசரி ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அங்கு வந்து

போவதால், அந்த இடத்தில் சுற்றுலா மையம் அமைத்தால் நலமாக இருக்கும். இனியேனும் அதுசம்பந்தமாக அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுதிநேரத் தொழிலாசிரியர்கள்.

*625 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பகுதிநேரத் தொழிலாசிரியர்களை முழுநேரத் தொழிலாசிரியர்களாக மாற்றி அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகுதிரு. செ. அரங்கநாயகம்: முழுநேரக் கைத் தொழில் ஆசிரியர்களுக்குரிய தகுதிகள் இருந்தும் பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களாக உயர்தொடக்கப் பள்ளிகளில் பணி செய்து வந்தவர்கள் சுமார் 800 பேருக்கு 1974–75 முதல் 1977–78 முடியவுள்ள காலத்தில் முழுநேரப் பதவிகள் அளிக்கப் பட்டன. மீதம் இருக்கும் சுமார் 1,200 பகுதிநேரக் கைத் தொழில் ஆசிரியர்களுள் பெரும்பாலோர் முழுநேரப் பதவிக்குரிய தகுதி இல்லாதவர்கள் எனத் தெரியவருகிறது. அவர்களுள் ஓரளவு தகுதி படைத்தவர்கள் சிலருக்காவது இனிவரும் ஆண்டுகளில் முழுநேரப் பதவிகள் அளித்திட இயலுமா என்பது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பகுதிநேரத் தொழில் ஆசிரியர்களாக உள்ளவர்கள் ஆயிரத்திற்கும்மேற்பட்டவர்கள்இன்னும் இருக்கிருர்கள் என்று சொன்னுர்கள். அவர்களை எல்லாம் கூடுமான வரையில் முழுநேர ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு மாதம் ரூ. 60 தான் சம்பளம் கொடுக்கப் படுகிறது. அதையாவது, உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் பயிற்சித் தொழிலாசிரியர்களுக்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளிலே ரூ. 210 என்றும், அதே தகுதி உடைய